# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
# கற்றல் கையேடு - பரதநாட்டியம்
# தரம் 7

## தவணை 1

**1.நயத்தல் - ஆக்கத்திறன்**

மயில், வாத்து, தாரா, கருடன், சோடிப்பறவைகள், அன்னம், புறா ஆகிய பறவையினங்களை நயத்தலும் அவற்றின் செயற்பாடுகளை பாவனை மூலம் அபிநயத்தலும்.

**2.செய்முறை :**

1. பதாகம் - திரிபதாகம் விநியோகம் அபிநயித்தல்
2. நாட்டடவு 5 – 8
   - நாட்டடவு 8 வகைப்படும்
   - சொற்கட்டு – தெய்யும் தத்த தெய்யும் தாம்
   - ஆதிதாளத்தில் அமைந்தது

**நாட்டடவு தாளம் - ஆதி**

1ஆம்காலம் $1_4$ 0 0

தெய் , யும் , தத் , த , தெய் , யும் , தா ; / தெய் , யும் , தத் , த , / தெய் , யும் , தா ; //

2ஆம்காலம்

தெய்யும்தத்ததெய்யும்தாதெய்யும்தத்ததெய்யும்தா /தெய்யும்தத்ததெய்யும்தா/ தெய்யும்தத்ததெய்யும்தா//

3ஆம்காலம்

தெய்யும்தத்ததெய்யும்தாதெய்யும்தத்ததெய்யும்தா

தெய்யும்தத்ததெய்யும்தாதெய்யும்தத்ததெய்யும்தா / தெய்யும்தத்ததெய்யும்தா

தெய்யும்தத்ததெய்யும்தா/ தெய்யும்தத்ததெய்யும்தா

தெய்யும்தத்ததெய்யும்தா //

**3.அறிமுறை :**

1. பதாகம் - சுகதுண்டம் வரையான முத்திரைகளின் விநியோகங்களை எழுதுதல்
2. நாட்டிய நூல்கள், அவற்றை எழுதிய ஆசிரியர்களும் பற்றி அறிதல்

| **நாட்டிய நூல்கள்** | **ஆசிரியர்கள்** |
|---|---|
| 1.நாட்டிய சாஸ்திரம் (பரதசாஸ்திரம்) | பரதமுனிவர் |
| 2.அபிநயதர்ப்பணம் | நந்திகேஸ்வரர் |
| 3.பரதநாட்டியம் | பாலசரஸ்வதி, வி.ராகவன் |
| 4.நடனசாரம் | திருமதி லீலாம்பிகை செல்வராசா |
| 5.ஆடற்கலை | திருமதி.லீலாம்பிகை செல்வராசா |
| 6.பரதக்கலை | பேராசிரியர்.வி.சிவசாமி |
| 7.தென்னாசிய கலை வடிவங்களின் சாஸ்திரமரபு | பேராசிரியர்.வி.சிவசாமி |
| 8.ஈழத்தமிழர் கலையும் கிராமியக்கூத்தும் | சபா.ஜெயராசா |
| 9.நாட்டியக்கலை | சுபாசினி பத்மநாதன் |
| 10.அரங்கவியலும், ஆடற்கலையும் | சுபாசினி பத்மநாதன் |
| 11.இலங்கையின் சாஸ்திரிய நடனங்கள | சுபாசினி பத்மநாதன் |
| 12.பைங்கலை பரதக்கலை | சுபாசினி பத்மநாதன் |
| 13.தமிழர் வளர்த்த ஆடற்கலை | கார்த்திகா கணேசர் |
| 14.காலந்தோறும் நாட்டியக்கலை | கார்த்திகா கணேசர் |

3. நடனத்தின் உட்பிரிவுகள்

- நடனத்தின் உட்பிரிவுகள் 3 வகைப்படும்
- அவை – நிருத்தம், நிருத்தியம், நாட்டியம்
- நிருத்தம் :- தாளக் கட்டுப்பாட்டுக்குள் அடங்கி கருத்தைப் புலப்படுத்தாத ஆடல்
  உ ம் - அலாரிப்பு, ஜரிஸ்வரம்
- நிருத்தியம் - தாளக்கட்டுப்பாட்டுக்குள் அடங்கி கருத்தைப் புலப்படுத்தும் ஆடல்
  உ+ம் - பதம், கீர்த்தனை
- நாட்டியம் - நடனத்திற்குச் சிறந்த ரஸஅபிநயம், பாவஅபிநயம்
  இவைகளைத் தத்ரூபமாக நடித்துக் காட்டுவதே நாட்டியம்
  உ+ம் - குறவஞ்சி, மகாபாரதம், ராமாயணம்

4. நவரஸம்

- கலை ரசிகனுக்குக் களிப்பூட்டும் தன்மையானது
- நாடக, நடன நிகழ்வுகளை அவதானித்தும், கேட்டும் பார்த்தும் பார்வையாளர் உளக்கிளர்சிசி அடைகின்றனர்
- இதுவே ரஸமாகின்றது
- ரஸம் என்பது சுவைக்கப்படுகின்றது எனப் பொருள்படும்
- ரஸம் கலையின் உயிர்
- பல்வகை அபிநயங்களின் சேர்க்கையால் காண்போரின் மனதில் சுவை ஏற்படுகின்றது
- நவரஸம் 9 வகைப்படும்
- சிருங்காரம், பீபத்ஸம், பயானகம், ஹாஸ்யம், வீரம், ரௌத்திரம், கருணை, அற்புதம், சாந்தம் ஆகியனவாகும்.

5. இசைக்குறியீடுகள் பற்றிய விளக்கம்

நடன, இசை உருப்படிகளை செயன்முறை விளக்கத்துடன் எழுதும் போது பயன்படுத்த வேண்டிய குறியீடுகளே இசைக்குறியீடுகள் எனப்படும்.

- ஒரு தாளத்தின் அங்கமுடிவைக் காட்டுவது /
- ஒரு தாளத்தின் ஆவர்த்தனமுடிவைக் காட்டுவது //
- நீண்ட ஓசையுள்ளது நெடில் ஸ்வரம் **ஸா**
- குறுகிய ஓசையுள்ளது குறில் ஸ்வரம் **ஸ**
- ஸ்வரங்களுக்கு கீழே புள்ளி கீழ்ஸ்தாயி **ஸ**̣
- சாதாரணசுருதியில் பாடுவது மத்தியஸ்தாயி **ஸ**
- ஸ்வரங்களுக்கு மேலே புள்ளி மேல்ஸ்தாயி **ஸ்**
- ஸ்வரங்களுக்கு மேலே இக்குறியீடு அந்நியஸ்வரம் *
- ஸ்வரங்களை அசைத்துப் பாடுவது- கமகம் 
- தாளத்தின் ஒரு அங்கம் லகு / கணை |
- தாளத்தின் ஒரு அங்கம் துருதம் 0
- தாளத்தின் ஒரு அங்கம் அனுத்ருதம் U
- 1 மாத்திரை அளவைக் குறிப்பது 1 கார்வை ,
- 2 மாத்திரை அளவைக் குறிப்பது 2 கார்வை ;

**4.கலாச்சாரப்பின்னணி**

**புராண வரலாறு :**

- திரேதா யுகத்தின் ஆரம்ப காலத்தில் மக்கள் மகிழ்ச்சி இன்றிக் கீழ் நிலைக் குணங்களால் பீடிக்கப்பட்டிருந்தனர்.
- தேவர்கள் அனைவரும் பிரம்மாவிடம் சென்று எல்லோருக்கும் மகிழ்ச்சியளிக்கக் கூடியதாகவும் கேட்கும் படியாகவும், பார்க்கும் படியாகவும் உள்ள பொழுது போக்கு ஒன்றை ஆக்கித் தருமாறு வேண்டினர்
- பிரம்மா அதை ஏற்று நான்கு வேதங்களாகிய **இருக்கு, யசுர், சாமம், அதர்வணம்** ஆகியவற்றில் இருந்து **வசனம், அபிநயம், இசை, ரஸம்** ஆகியவற்றை எடுத்து ஐந்தாவது வேதமாகிய நாட்டியத்தைப் படைத்தார்.
- பிரம்மா பரத முனிவருக்கு உபதேசித்தார்
- பரதர் தனது நூறு பிள்ளைகளுக்கு பயிற்சியளித்தார்.
- சிவபெருமான் முன்னிலையில் “அமிர்தமதனம்”, “திரிபுரதாகம்” என்னும் நாடகங்களை அரங்கேற்றினார்
- சிவபெருமான் மகிழ்ந்து தண்டு முனிவர் மூலம் தாண்டவத்தை பரதருக்கு உபதேசித்தார்
- பார்வதி லாஸ்யத்தை பூவுலக மன்னன் பாணாசுரனின் மகள் உஷைக்குக் கற்பித்தார்
- உஷை இக்கலையை துவாரகையின் இடையர் குலப்பெண்களுக்குக் கற்றுக் கொடுத்தார்
- அவர்கள் சௌராஷ்டிரப் பெண்களுக்குக் கற்பித்தனர்
- இவ்வாறு உலகம் முழுவதும் பரதக்கலை பரவியது.

## தவணை 2

**நயத்தல்** -

கோலாட்டம், கரகம் ஆகிய நடனங்களுக்குரிய - இசை, ஒப்பனை, ஆடல்முறை அறிவர்

**ஆக்கத்திறன்** -

- மாயங்கள் செய்திட வந்தாண்டி என்ற பாடலுக்கு அபிநயம் செய்தல்
  இராகம் - யதுகுலகாம்போதி
  தாளம் - ஆதி (திஸ்ரநடை)
- மந்திரக்காரண்டி என்ற பாடலுக்கு அபிநயம் செய்தல்
  தாளம் - ஏகம் (திஸ்ரநடை)

**செயன்முறை** –

- அர்த்தபதாகம், கர்த்தரீமுகம் முத்திரைகளின் விநியோகங்களை அபிநயத்தல்
- தாதெய்தெய்த அடவு 1- 4
  - பரவல் அடவு என்றும் சாரிகா அடவு என்றும் அழைக்கப்படும்.
  - நான்கு வகைப்படும், ஆதிதாளத்தில் அமைந்தது.
- பூஜா நடனம்
  - பூஜா நடனம் என்பது பூஜித்து வணக்கம் செலுத்தி ஆடப்படும்
  - பூஜைக்கு பூக்கள், தீபம் பயன்படுத்தப்படும்
  - நடனத்தின் பொழுது அஞ்சலி முத்திரையும் பயன்படுத்தப்படும்
  - பாடல் - கல்வித் தெய்வம் அவள் தானடி தோழி
  - இராகம் - பிருந்தாவனசாரங்கா, தாளம் - ஆதி (திஸ்ரநடை)
  - பாடல் இயற்றி இசை அமைத்தவர் - பிரம்மஸ்ரீ எம். வீரமணிஐயர்

**அறிமுறை**

- தாண்டவம்
  - வீரமும் சினமும் வெளிப்பட வீறுகொண்டு கம்பீரமாகத் தாளலயங்கள் விளங்க ஆடும் சிவபிரானுக்குரிய நடனம்
  - தாண்டவங்களை ஆடிக்காட்டி வகைப்படுத்தியவர் சிவபெருமான்
  - தண்டு என்ற மகரிஷிக்கு உபதேசிக்கப்பட்ட நாட்டியம் தான் தாண்டவம்
  - 108 தாண்டவங்கள் உள்ளன
  - ஐந்து தொழிலைகளையும் குறிக்கும் 6 தாண்டவங்களும் ஐந்தொழிலையும் ஒருங்கே குறிக்கும் ஒரு தாண்டவமும் ஆக மொத்தம் 7 தாண்டவம்

| தாண்டவம் | இடம் | சபை | தொழில் |
|---|---|---|---|
| 1. காளிகா தாண்டவம், முனிதாண்டவம் | திருநெல்வேலி | தாமிரசபை | படைத்தல் |
| 2. கௌரி தாண்டவம் | திருப்புத்தூர் | சிற்சபை | காத்தல் (துன்பம்) |
| 3. சந்தியா தாண்டவம் | மதுரை வெள்ளியம்பலம் | ராஜிதசபை | காத்தல் (இன்பம்) |
| 4. சங்கார தாண்டவம் | சுடலையில் நள்ளிரவில் | ----------------- | அழித்தல் |
| 5. திரிபுரதாண்டவம் | திருக்குற்றாலம் | சித்திரசபை | மறைத்தல் |
| 6. ஊர்த்துவதாண்டவம் | திருவாலங்காடு | இரத்தின சபை | அருளல் |
| 7. ஆனந்ததாண்டவம் | சிதம்பரம் (பொன்னம்பலம்) | கனக சபை | ஐந்தொழில் |

- லாஸ்யம்
    - மென்மையான கரண அங்ககாரங்களுடன் சிருங்காரத்தையோ, கருணையையோ முக்கிய சுவையாகக் கொண்டு லலிதமாயும் மிருதுவாயும் ஆடும் நடனம்
    - தேவதை பார்வதி
    - அழகு, நளினம், அருள், அங்கசத்தம், சௌஷ்டவம் முக்கிய இடம் வகிக்கின்றது
    - அபிநயத்திற்கு முக்கியத்துவம்
    - சிவனின் மனைவியாகிய உமாதேவியினால் கிருஷ்ணணின் பேரனாகிய அனிருத்தனின் மனைவியும் பாணாசுரனின் மகளுமாகிய உஷைக்குக் கற்றுக் கொடுக்கப்பட்டது
    - உஷை துவாரகையில் உள்ள இடையப் பெண்களுக்குக் கற்பிக்க அவர்கள் மூலமாய் இக்கலை எங்கும் பரவியது

- கரணம்
    - ஒரே அபிநயத்தை முதலில் வலது கையினால் அபிநயம் செய்து உடனே அதையே இடது கையினால் அபிநயம் செய்தல்
    - கையின் அபிநயத்திற்கேற்ப அடிபோடுதலும் இணைந்திருக்கும்
    - 108 வகைப்படும்

- அங்கஹாரம்
    - சில கரணங்கள் இடைவெளியின்றிச் சேர்த்து ஆடி முடித்தல்
    - கரணங்கள் என்னும் மணிகளைக் கோர்த்து மாலை போல் ஆடுவதால் இப்பெயர் பெற்றது
    - ஒரு கருத்தை முழுமையாக வெளிப்படுத்தக் கை, கால்களால் இணைந்து செய்யப்படும் அபிநயங்களின் தொகுப்பு

- நிருத்த ஹஸ்தம்
    - கரணங்களும் அங்கஹாரமும் இதனுள் அடங்கும்
    - கரணங்கள், நிருத்தம் ஆகியவற்றில் அபிநயம் செய்யப்படுபவை
    - 30 வகைப்படும்
    - இணையாதகை, இணைந்தகை என்ற வேற்றுமை உண்டு
    - நாட்டியசாஸ்திரம் விரிவாகக் கூறுகின்றது

6. அடவுகளின் சொற்கட்டுகளைத் தாள அங்கக் குறியீட்டிற்குள் எழுதுதல்

**தாதெய்தெய்த அடவு தாளம் - ஆதி**

1ஆம்காலம் $1_4$ 0 0

தா ,; தெய்,; தெய்,; த , ; / தித் ,; தெய் , ; / தெய் , ; த , ; //

2ஆம் தாதெய், தெய்,த, தித்,தெய்,தெய், த, / தாதெய், தெய், த, / தித்,தெய்,தெய், த, //

3ஆம் ததெய்தெய்ததித்தெய்தெய்த

ததெய்தெய்ததித்தெய்தெய்த / ததெய்தெய்ததித்தெய்தெய்த ˙/ ததெய்தெய்ததித்தெய்தெய்த

**தெய்ஹத் தெய்ஹி அடவு          தாளம் - ஆதி**

1ஆம்காலம்          $1_4$          0          0

தெய் ,; ˙ஹத்,; தெய்,; ˙ஹி , ; / தெய் ,; ˙ஹத் , ; / தெய் , ; ˙ஹி , ; //

2ஆம் தெய்,ஹத், தெய்,ஹி, தெய்,ஹத், தெய்,ஹி, / தெய்,ஹத், தெய்,ஹி, / தெய்,ஹத், தெய்,ஹி, //

3ஆம் தெய்ஹத்தெய்ஹிதெய்ஹத்தெய்ஹி

தெய்ஹத்தெய்ஹிதெய்ஹத்தெய்ஹி / தெய்ஹத்தெய்ஹிதெய்ஹத்தெய்ஹி / தெய்ஹத்தெய்ஹிதெய்ஹத்தெய்ஹி //

7. பஞ்சஜாதி
   - பஞ்ச என்பது ஐந்து
   - ஜாதி என்பது லகுவின் எண்ணிக்கையை தீர்மானிக்கும் வகைகள்

| ஜாதி | சொற்கட்டு | எண்ணிக்கை |
|---|---|---|
| திஸ்ரஜாதி | தகிட | 3 |
| சதுஸ்ரஜாதி | தகதிமி | 4 |
| கண்டஜாதி | தகதகிட | 5 |
| மிஸ்ரஜாதி | தகிடதகதிமி | 7 |
| சங்கீர்ணஜாதி | தகதிமிதகதகிட | 9 |

**கலாசாரப்பின்னணி.**

8. காமன்கூத்து
   - ஆங்கிலேயர் காலத்தில் பெருந்தோட்டப் பயிர்ச் செய்கை இலங்கையின் மத்திய மலை நாட்டில் ஆரம்பிப்பதற்கு இலங்கையர் எவரும் முன்வராத நிலையில் இந்தியாவில் இருந்து தமிழ்த் தொழிலாளர்களை அழைத்து வந்தார்
   - கிராமியக் கலைகளில் வல்ல இசைக் கலைஞர்க ள் ஆடல், கூத்து கலைஞர்களும் வந்திருந்தனர்
   - இந்தியாவில் தாம் ஆடியும் பாடியும் வந்த கலைகளில் ஒன்றான காமன் கூத்தினை மலையகத்திலும் ஆடினர்
   - சிவன் தக்கனது தவத்தை அழித்த பின்னர் பெருங்கோபத்தோடு இமயமலையில் தவமிருக்கின்றார்
   - தேவலோகம் அனலால் அவதியுறுகிறது
   - தேவர்கள் என்ன செய்வதென்று தவிக்கையில் இந்திரன் சிவனுடைய தவத்தை அழிக்கச் செல்லும்படி மன்மதனுக்குத் தூதோலை அனுப்புகின்றான்
   - மன்மதன் இந்திரன் கட்டளையை ஏற்றுச் சிவனின் தவத்தையழித்து மடிகிறான்
   - ரதி சிவனிடம் இரந்து வேண்ட மாறன் (மன்மதன்) உயிர் பெறுகின்றான்
   - இக்கூத்தினை காமன் மாஸ்டர் பயிற்றுவிக்கிறார்.
   - இக்கூத்தின் பக்கவாத்தியம் தப்பு
   - இக்கூத்து எளிமையானது
   - வடமோடி, தென்மோடி ஆட்டம் போல ஆட்ட நுணுக்கங்களைக் கொண்டிருக்கவில்லை
   - முகப்பூச்சிற்கு அரிதாரம் பூசப்படும்
   - அழகிய சரிகைத் துணிகளினாலான உடைகளை மன்மதன், ரதி அணிவர்
   - அழகிய புஜக்கிரீடம், மணிமுடி, மணிமாலைகள், முத்து மாலைகள் பூணுவர்
   - கழுத்திற் பலவகையான மாலைகளை அணிந்து அழகு படுத்துவர்.

## தவணை 3

### நயத்தல்

- அபிநயப்பாடலில் நயந்தவற்றைக் கூறுவார்.--- பாடலின்பொருள், அபிநயம், முத்திரைப்பயன்பாடு, பாடலில் வரும் கதைச்சம்பவங்கள்.

### ஆக்கத்திறன்

- கோலாடுவோம் நாமும் பண்பாடுவோம் என்ற கோலாட்டப் பாடலிற்கு அபிநயம் அமைத்து கோலாட்ட நடனத்தினை ஆடிக் காட்டுவார்.

### செய்முறை

1. அர்த்தச்சந்திரன், அராளம், சுகதுண்ட முத்திரைகளின் விநியோகங்களை அபிநயிப்பார்.
2. தெய்ஹத் தெய்ஹி அடவு

- பாதங்களைக் குதித்து மெட்டிச் செய்வது. குதித்து மெட்டுவதனால் குதித்து மெட்டடவு எனப்படும்.
- 4வகைப்படும்.
- ஆதிதாளத்தில் அமைந்தது.
- இதன் சொற்கட்டு – தெய்ஹத் தெய்ஹி

3. காவடி நடனத்தினை கிராமிய ஆடற்சுவடுகளுடன் ஆடிக் கொலுப்பித்தல்.

### அறிமுறை

1. ஆதி, ரூபக தாளங்களை அறிதல்
   ஆதிதாளம்
   - மறுபெயர் சதுஸ்ரஜாதி திரிபுடைதாளம்.
   - 8 அட்சரத்தைக் கொண்டது.
   - ஒரு அட்சரத்தில் அடங்கியுள்ள மாத்திரைகளின் எண்ணிக்கை 4ஆகும்.
   - ஆதிதாளத்தின் மாத்திரைகளின் எண்ணிக்கை 32.

   ரூபகதாளம்

   - 6 அட்சர எண்ணிக்கையைக் கொண்டது.
   - ரூபக தாளத்தின் மாத்திரைகளின் எண்ணிக்கை 24.

2. சப்த தாளங்கள்
   - சப்த என்பது ஏழு ஆகும். அடிப்படையான தாளங்கள் 7 வகைப்படும்.

| | தாளங்கள் | அங்கஅடையாளம் |
|---|---|---|
| 1. | துருவதாளம் | 1011 |
| 2. | மட்டியதாளம் | 101 |
| 3 | ஜம்பைதாளம் | 1u0 |
| 4. | திரிபடைதாளம் | 100 |
| 5. | ரூபகதாளம் | 01 |
| 6. | அடதாளம் | 1100 |
| 7. | ஏகதாளம் | 1 |

3. புஷ்பாஞ்சலி
    - நடன நிகழ்ச்சிகளில் ஆரம்ப நிகழ்வாக இடம் பெறும்.
    - மலர்களினால் இறைவனுக்கு அஞ்சலி செய்து வணங்குவது போல் ஆடப்படுவதால் புஷ்பம் + அஞ்சலி – புஷ்பாஞ்சலி எனப்படுகிறது.

ஸ்லோகம்- வி்க்னானாம் நாஷனம் கர்தும் பூதானாம் ரக்ஷநாயச

தேவானாம் துஷ்டயேசாபி ப்ரேக்ஷகானாம் விபூதையே

ஸ்ரேயஸே நாயகஸ்யாத்ர பாத்ர ஸம்ரக்ஷநாயச

ஆசார்யா சிக்ஷா சித்தார்த்தம் புஸ்பாஞ்சலி மதாரபேத்

கருத்து - இடையூறுகளைத் தடுப்பதற்காகவும், உயிர்களைக் காப்பதற்காகவும், பார்வையாளருடைய நன்மைக்காகவும், நடிகையின் பாதுகாப்பிற்காகவும், ஆசிரியருடைய கல்விச்சித்திக்காகவும், மலர்களால் வணக்கம் செய்தல் வேண்டும்.

**கலாச்சாரப்பின்னணி**

1. கரகம்
    - பக்திசார் நடனம்.
    - மாரியம்மனுக்கு நேர்த்திக்கடன் வைத்து காணிக்கை செலுத்தும் நடனம்.
    - அம்மைநோய் வந்த போதும் பஞ்சம் வந்த போதும் கரகமாடி நோய் தீர்த்தனர்.
    - சமநிலை பேணி ஆடப்படும் நடனம்.
    - நாதஸ்வரம், ஒத்து, தவில், உடுக்கு பக்கவாத்தியங்களாகப் பயன்படும்.
    - ஆண்கள் பிஜாமா அல்லது தார்பாச்சி அணிந்தும் பெண்கள் மேற்சட்டையும் பிஜாமாவும் அல்லது சேலை அணிந்து ஆடுவர்.

2. காவடி
    - முருகனை வேண்டி ஆடப்படும் நடனம்.
    - தோற்றம் பூர்வீகமான சுமை தூக்கும் செயற்பாட்டோடு இணைந்தது.
    - பல்லக்குப் போலச் சிறியதாக அமைத்து அதனைத் தோளில் தூக்கிச் சென்று ஆலயத்தில் ஆடி இறக்கி வைப்பது.
    - காணிக்கைப் பொருட்களை ஒரு தடியின் இருமுனைகளிலும் கட்டித் தூக்கிச் சென்றனர்.
    - இதனைக் காவுதடி என்றழைப்பர்.
    - இந்நடனத்தில் அவ்வவ் போது ‘‘வேல் வேல்’’, ‘‘அரோகரா’’ என்று ஒலி எழுப்பி ஆடுவர்.
    - தவில், நாதஸ்வரம், உடுக்கு, முழவு, செண்டை, பறை, மத்தளம், சுத்தமத்தளம் ஆகிய இசைக்கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன.
    - சித்திரக்காவடி, துலாக்காவடி, தூக்குக்காவடி, பறவைக்காவடி, மச்சக்காவடி, பாற்காவடி, பன்னீர்க்காவடி, சந்தனக்காவடி, சேவற்காவடி, புஷ்பக்காவடி போன்ற காவடி வகைகள் உண்டு.
    - தேர்த்திருவிழா, நேர்த்திக்கடன் இவற்றிற்காக காவடி நடனம் ஆடப்படும்.

**தொகுப்பு - திருமதி.தேவகுமாரி யோகேந்திரன்(ஆசிரியர். யா/தொண்டமானாறு வீரகத்திப்பிள்ளை ம.வி.)**

**திருமதி ஸ்ரீதேவி கண்ணதாசன் (ஆசிரிய ஆலோசகர் மா.க.தி )**